**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – 2017–18 ஆம் நிதியாண்டில் மாற்றுத் திறனாளிகள் நலனுக்கான அரசு நலத் திட்டங்கள் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாவட்ட அளவில் கலை நிகழ்வுகள் மற்றும் தெருமுனை நாடகங்கள் நடத்துவது வழிகாட்டி நெறிமுறைகள் வகுத்தல், திட்டத் தொடராணை மற்றும் ரூ.6,40,000/– நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(1டி) எண்.65 நாள்: 19–09–2017
ஹேவிளம்பி, புரட்டாசி 3,
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்கப்பபட்டது:

1. அரசாணை(நிலை) எண்.33, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 14–11–2016.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர்(மு.கூ.பொ.) ந.க.எண்.1868/ மா.தி.ந.2.1/ 2017, நாள் 30.06.2017.

–––––––

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி கிராமப்புறங்களில் வசிக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கு அரசால் செயல்படுத்தப்படும் பலவிதமான உதவித் திட்டங்கள் மற்றும் அவர்களது உரிமைகள் குறித்தான விழிப்புணர்வினை ஏற்படுத்திடும் வகையில், முதல் முதலாக மாவட்ட அளவில் தெருமுனை நாடகங்கள் மற்றும் சாலை விளக்க நிகழ்வுகள் நடத்திட, செலவினமாக ஒரு மாவட்டத்திற்கு ரூ.20,000/– வீதம், 32 மாவட்டங்களுக்கு மொத்த செலவினமாக ரூ.6,40,000/– நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசாணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தமது கருத்துருவில், 2016–17 ஆம் நிதியாண்டில் மாற்றுத் திறனாளிகள் நலனுக்கான அரசு நலத் திட்டங்கள் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல், மாவட்ட அளவில் கலை நிகழ்வுகள் மற்றும் தெருமுனை நாடகங்கள் நடத்துவதற்கு வழங்கப்பட்ட தொகை முழுவதும் செலவிடப்பட்டது எனவும், 2017–18 ஆம் நிதியாண்டில் தொடர்ந்து செயல்படுத்திட ஏதுவாக திட்டத் தொடராணையும், இத்திட்டத்திற்கான செலவினமாக ஒரு மாவட்டத்திற்கு ரூ.20,000/– வீதம் 32 மாவட்டங்களுக்கு மொத்தம் ரூ.6,40,000/– நிதி ஒப்பளிப்பு செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, கிராமப்புறங்களில் வசிக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கு அரசால் செயல்படுத்தப்படும் பலவிதமான உதவித் திட்டங்கள் மற்றும் அவர்களது உரிமைகள் குறித்தான விழிப்புணர்வினை ஏற்படுத்திடும் வகையில், மாவட்ட அளவில் தெருமுனை நாடகங்கள் மற்றும் சாலை விளக்க நிகழ்வுகள் 2017–18 ஆம் நிதியாண்டில் தொடர்ந்து

செயல்படுத்திட ஏதுவாக திட்டத் தொடராணையும், இத்திட்டத்திற்கான வழிகாட்டி நெறிமுறைகள் மற்றும் செலவினமாக ஒரு மாவட்டத்திற்கு ரூ.20,000/– வீதம் 32 மாவட்டங்களுக்கு மொத்தம் ரூ.6,40,000/– (ரூபாய் ஆறு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலும், இத்திட்டத்தினை கீழ்காணும் வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றி, செயல்படுத்துமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

i. மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் சலுகைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டம் 2016ன் சாராம்சங்களை காட்சிப்படுத்தக் கூடிய வகையில் தெருமுனை நாடகங்கள் மற்றும் சாலை விளக்க நிகழ்வுகள் மாவட்டங்களில் நடத்தப்பட வேண்டும்.
ii. பெருவாரியான மாற்றுத்திறனாளிகள் பங்குபெற்று பயன்பெறும் விதமாக மாவட்டத்தின் முக்கிய இடங்களில் பொது மக்கள் அதிக அளவில் கூடும் இடங்களில் சாலை விளக்க நிகழ்வுகள் அமைதல் வேண்டும்.
iii. மாவட்ட திட்ட மேலாளர், புதுவாழ்வுத் திட்டம் அவர்களுடன் இணைந்து தெருமுனை நாடக நிகழ்வு (street play) மற்றும் சாலை விளக்க நிகழ்வு (Road Shows) நடைபெறும் இடங்கள் முடிவு செய்திட வேண்டும்.
iv. ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரின் அறிவுரைப்படி, தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் இத்திட்டத்தினை செயல்படுத்தலாம்.
v. தெருமுனை நாடக நிகழ்வு மற்றும் சாலை விளக்க நிகழ்வுகள் குறித்து விரிவான விளம்பரம் செய்யப்பட வேண்டும்.
vi. விளம்பர பலகைகள் ஏற்பாடு செய்வதோடல்லாமல் திட்டங்களின் விவரங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் அச்சடித்து விநியோகிக்கப்பட வேண்டும்.
vii. விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் மாற்றுத் திறனாளிகளுக்காக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை மற்றும் கல்வித்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் சலுகைகள் குறித்தான விவரங்களும் இடம் பெறுதல் அவசியம்.

5. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 – சமூக நலன் 101 – மாற்றுத் திறனாளிகள் நலன் – மாநிலச் செலவினங்கள் – CO மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வுத் திட்டம் – 08 – விளம்பரமும் பிரச்சாரமும் – 03 – செயல்முறை விளக்கம்.
[த.தொ.கு.2235–02–101–CO-0838]

6. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவிற்கான நிதி (ரூ.6,40,000/–) 2017–2018 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் எனினும் 2017–18 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் ஒரு குறிப்பிட்ட தொகையினை சேர்ப்பதன் மூலம் இச்செலவினம் சட்டப் பேரவையின் பார்வைக்கு கொண்டு செல்லப்பட வேண்டும். அவ்வாறு நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி,

மேலே பத்தி 3–இல் அனுமதிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் 2017–18 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் இத்தொகையை சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதி (சந / வ.செ.பொ.II)த் துறைக்கு உரிய நேரத்தில் அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.எண்.45769/நிதி(சந)/2017, நாள் 12.09.2017 பெறப்பட்ட இசைவு மற்றும் கூடுதல் பேரேட்டு எண்.1416 (ஆயிரத்து நானூற்று பதினாறு) வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.)**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–5.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநில கணக்காயர்(கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை–18.
முதன்மை மாநில கணக்காயர்(கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை–18 (பெயரில்)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளி நல அலுவலர்கள் (மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள், (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

**நகல்:**
நிதி(சந/வ.செ.பொ.II)த் துறை, சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர்(சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர்(மீன்வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இ.கோ./உ.ந.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.